பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 12 வியாழக்கிழமை 26.06.2025 கதிர் 229

### இது ரகசியம் அல்ல!

அணையாவிளக்குபோராட்டத்தில் நேற்றுதமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானத்திற்கு எதிராக ஒரு கும்பல் கூக்குரல் எழுப்பியது. கூடியிருந்த யூடியூப்பர்கள் அவர் ☞2

# ‘அணையா விளக்கு’ போராட்டத்தில் அரசியல் ‘ரௌடிகள்’ நேற்று குழப்பம்

## வேலன் சுவாமிகள் விதைத்தது வினையாகியது

செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேசத்தின் தலையீட்டையும் கவனத்தையும் வலியுறுத்தி மூன்று நாள்களாக இரவு பகலாகத் தொடர்ந்து இடம்பெற்ற ‘அணையா விளக்கு‘ போராட்டத்தின் இறுதி நாளான நேற்றுப் பகல் போராட்ட இடத்தில் கூடியிருந்த சில அரசியல்ரௌடிகள்குழப்பம்விளைவித்தனர். நிகழ்விடத்திற்கு வந்திருந்த அரசியல்வாதிகளுடன்அவர்கள்அநாகரிகமாக நடந்துகொண்டதுடன் அவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறவேண்டும் என்றும் ☞3

# ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இலங்கையின் விவகாரம்

## கொண்டுசெல்லப்படவேண்டும் என்று தமிழ் எம்பிக்கள் மனித உரிமைகள் உயராணையர் வோல்க்கர் டர்க்கிடம் வலியுறுத்து

இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில்இருந்துபாதுகாப்புச் சபை பொதுச் சபை ஆகியவற்றுக்குக் கொண்டு செல்லவேண்டும் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டர்க்கிடம் நேற்று வலியுறுத்தினர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணம் ஜெட்



விங் ஹோட்டலில் நேற்று முன்னிரவில் நடந்தது.இந்தச்சந்திப்பில்முன்னாள் ☞2

## ‘அணையா விளக்கு‘ ஏற்பாட்டாளரின் மனதிலிருந்து

அணையாவிளக்குமக்கள்போராட்டத்தில் அரசியல் ‘ரௌடி‘த்தனத்தில் ஈடுபட்டவர்கள் ஏற்படுத்திய குழப்பம் தொடர்பில் அதன் ஏற்பாட்டாளர்களில் முதன்மையானவரான மருத்துவர் யெஜசீலன் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்திருப்பதை அப்படியே இங்கு தருகின்றோம்: ------

தாயுடன் குழந்தை இருக்கும் எலும்புக்கூட்டின் புணூ படங்கள். தூங்க முடியவில்லை, சில நாட்களாக.

என்னத்தை தான் செய்யமுடியும் ஒரு சாமானியனால். நான் எந்த கட்சியுமில்லை, தனிப்பெரும் செல்வாக்கும் இல்லை.

மாத சம்பளத்திற்காய் காத்திருக்கும் ஒரு சராசரி தந்தை.

வேறு பலரும் கேட்டார்கள்.. என்ன அண்ணா செய்யமுடியும்?

போராட்டமே வாழ்வாகி போன ஒரு இனத்தில் நித்தமும் போராட்டம்.

கண்டு கொள்ள யாரும் இல்லை.

கூடவே பச்சிளங்குழந்தைகளின் என்புக்கூடுகள் நான்கு.. அறச்சீற்றம் தவிர வேறுஏதும்இருக்கவில்லை.என்னசெய்துவிட வேண்டும் என்று ஆலோசனைகள் ☞6

# ஆளும்தரப்புடன் இணைந்துதான் தீர்வைக் காணவேண்டிய சூழல்

## யதார்த்தத்தை எடுத்துரைத்தார் ஐ.நா. உயராணையர்

தமிழ் மக்களுக்கு இலங்கையில் பிரச்சினைகள் இருப்பதை தான் உணர்கிறார் என்றும் இதற்கான தீர்வினை ஆளும்தரப்புடன் இணைந்துதான் மேற்கொள்ள வேண்டிய சூழல் இருப்பதாகவும் திருகோணமலை யுபிலி மண்டபத்தில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின்போது ஐ.நா.மனித உரிமைகள் உயராணையர் வோல்க்கர் டர்க் தெரிவித்தார்.

திருகோணமலைக்கு நேற்று வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்க்கர் டர்க், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற சிவில் அமைப்புப்பிரதிநிதிகள்,வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட சிலரை திருகோணமலை கல்லூரி வீதியில் அமைந்துள்ள யுபிலிமண்டபத்தில்சந்தித்துக் ☞2

# நிலைமாறு கால நீதியை அடைய உண்மையை அறிதல் அவசியம்

## நினைவுகூரல்களும் இன்றியமையாதன என ஐ.நா. உயராணையர் கொழும்பில் தெரிவிப்பு

நிலைமாறுகாலநீதியைஅடைந்துகொள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் நினைவுகூரல் என்பன இன்றியமையாதனவாகும். அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளை உறுதிசெய்வதற்கும், அவர்களை ஆற்றுப்படுத்தவதற்கும் மிக மோசமானகுற்றங்களில்ஈடுபட்டவர்கள் ☞6

# இலங்கைப் போர்க் குற்றங்களை சர்வதேச நீதிமன்றில் விசாரிக்குக

## அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் இணைந்து ஐ.நா. உயராணையருக்கு மனுக் கையளிப்பு

இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் உயராணையருக்கு மனு கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும் சிவில் ☞2

# 5ஆவது நாளாக நேற்றும் மயிலிட்டியில் போராட்டம்

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிக்க கோரி நேற்று ஐந்தாம் நாளாக காணி உரிமையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு



ஆதரவு தெரிவித்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோரும் நேற்றுப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமது போராட்டம் 5ஆவது நாளாகவும் தொடரும்நிலையிலும்ஆளும்தரப்புஅது குறித்துப் பாராமுகமாக இருப்பது தொடர்பில் மக்கள் ☞2

# ‘நாம் யாருக்கும் ஆதரவில்லை’

## ஆளும்தரப்பு அறிவிப்பு

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமைகளில் நாம் எந்த நாடுகளுக்கும் சார்பாக செயற்படவில்லை. அமைதிக்காகவே குரல் கொடுப்போம். உலகில் எந்தவொரு நாட்டிலும் யுத்த நிலைமை ஏற்படுவதை அங்கீகரிக்க முடியாது. இதுவே ஆளும்தரப்பின் நிலைப்பாடாகும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசதகவல்திணைக்களத்தில் செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞6

# செம்மணியில் குழப்பம் விளைத்ததற்கு அமைச்சர் சந்திரசேகரன் கண்டனம்

செம்மணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ‘அணையா விளக்கு’ போராட்டத்துக்குநாம்முழுஆதரவையும் வழங்குகின்றோம் - செம்மணியில் குழப்பம்விளைவிக்கப்பட்டசம்பவத்தை நாம்வன்மையாகக்கண்டிக்கின்றோம் என்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகரன் நேற்றுத் தெரிவித்தார்.

மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து செம்மணிக்குச் சென்ற அமைச்சரை அங்கிருந்த ரௌடிகள் கும்பல் ஒன்று விரட்டிக் கலைப்பதில் மும்முரமாக இருந்தது. இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மணி போராட்டத்துக்கு ☞3

## இனி இது .....

விரட்டியடிக்கப்பட்டார் என்ற தமது ரிஆர்பியை ஏற்றிக்கொண்டு சம்பாதித்தார்கள். ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், சிவஞானம் போராட்ட இடத்திலிருந்து வெளியேறிச் சென்றுகொண்டிருந்தபோது அவரின் பின்னால் சென்ற ஒரு சிறு கும்பல் அவருக்கு எதிராகக் கூச்சலிட்டது என்பதுதான்.

ஐ.நா. மனித உரிமைகள் உயராணையருடனான சந்திப்புக்காக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் செம்மணிக்கும், மயிலிட்டிக்கும் போராட்டக்களத்திற்குச் சென்று தனது ஆதரவை வழங்குவதற்கு விரும்பியிருந்தார். அவரை அழைத்துச் செல்வதற்காகவே சிவஞானமும் கூடவே வந்திருந்தார். பிறமாவட்டம் ஒன்றிலிருந்து வந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை அப்படியே போராட்டக்களத்திற்குச் சென்றுவிட்டுப் போங்கள் என்று சொல்வது நாகரிகமல்ல என்பதால், அவரை போராட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்றிருந்தார் சிவஞானம்.

அவர்கள் இருவரும் போராட்டக்களத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பின்னர், மயிலிட்டிக்குச் செல்வதற்காக அங்கிருந்து புறப்பட்டனர். சிவஞானம் தனது வாகனத்தை நோக்கி நடக்கத்தொடங்கியபோதே அவரின் பின்னால் அவரை அவதூறு பேசிக்கொண்டு சிலர் ஓடத் தொடங்கினர். பரபரப்பு ஏற்பட்டதும் அங்கிருந்த ஊடகவியலாளர்களும் யூரியூப்பர்களும் அவர்களின் பின்னால் ஓடினர். தங்கள் மீது ஊடக வெளிச்சம் பாய்கிறது என்றதும் இந்த அரசியல் காவாலிகள் இன்னும் வேகங்கொண்டு வேண்டத்தகாத வார்த்தைகளை வீசத் தொடங்கினர். அது குறித்து அலட்டிக் கொள்ளாத சிவஞானம் நிதானமாக நடந்து தனது வாகனத்திற்குச் சென்று அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

போராட்டக் களத்திலிருந்து புறப்பட்டுச் சென்றவரைப் பின்னால் துரத்திச் சென்று அவதூறு கூச்சலிட்டவர்களை வைத்து, மக்கள் விரட்டியடித்தனர் என்ற போக்கிலித்தனம் நிகழ்த்தப்பட்டதுதான் மிகப் பெரும் சோகம். சம்பவம் நிகழ்ந்தபோது ஒரு சாட்சியாக நானும் அங்கிருந்தேன். இந்த அரசியல் காவாலிகளை தடுத்து நிறுத்தவும், போராட்டத்தின் நோக்கத்தை திசைதிருப்பி இதனை ஒரு அரசியல் காழ்ப்புணர்வு சந்தையாக மாற்றாவேண்டாம் என்றும் ஏற்பாட்டாளர்கள் எவ்வளவோ கெஞ்சினார்கள். இவர்கள் மீது கவனத்தைச் செலுத்தி எல்லாவற்றையும் மடைமாற்றிவிடாதீர்கள் என்று யூரியூப்பர்களிடம் கெஞ்சினார்கள். ஆனால், பணமும் பரபரப்பும் வியூக்களுமே அவர்கள் கண்களின் முன்னால் மின்னிக்கொண்டிருக்க அவர்களுக்கு ஏற்பாட்டாளர்களின் கெஞ்சல்கள் உறைக்கவில்லை என்பது கொடூரம்.

இந்த அரசியல் காழ்ப்புணர்வு 'ரௌடி'த்தனத்தின் பின்னால் இ-ருந்தது கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் பின்னணிதான். தமிழ் அரசுக் கட்சியைவிட்டு விரட்டப்பட்ட, அதன் காரணாகவே இன்று அரசியல் அநாதையாகிப்போய்விட்ட கந்துவட்டிக்காரனான அந்த நபர்தான் சிவஞானத்தார் வெளியேறும்போது அவரை இலக்கு வைக்கவேண்டும் என்பதை அவர் போராட்டத்திற்கு வரும்போதே திட்டமிட்டுக்கொண்டார். அதனால்தான் அவர் வெளியேறிச் சென்றபோது பின்னால் ஓடிச் சென்று கத்தினார். அவரோடு சேர்ந்து கிளிநொச்சியிலிருந்து வந்த சிலரும், என்னவென்றே தெரியாது, புரியாது உணர்வெழுச்சியுடன் இருந்த சில இளைஞர்களுமாகச் சேர்ந்துகொள்ள அந்த இடம் பரபரப்பாகியது என்பது மட்டுமே நடந்த உண்மை.

இதேதான், தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் சந்திரசேகரனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஜீவன் மற்றும் இளங்குமரனுக்கும்கூட நிகழ்ந்தது. யாரோ போராட யாரோ அதைப் பயன்படுத்தி தமது அரசியல் வஞ்சங்களைத் தீர்த்துக்கொண்ட கேவலமான, மலினமான அரசியல்தான் அங்கு இடம்பெற்றது.

அவ்வாறு நடந்துகொண்டவர்களுக்கு தாங்கள் எதிர்க் கூச்சல் போட்டவர்கள் இதற்கு முன்னர் ஆற்றிய பணிகள் என்ன, அவர்களின் அர்ப்பணிப்பும் வெளிப்பாடுகளும் என்ன என்பதெல்லாம் ஒன்றும் தெரியாது. தம்மை அரசியல் களத்திலிருந்து அகற்றியதற்குப் பழிவாங்குவது மட்டுமே அவர்களின் நோக்கம் சிந்தனை.

இந்தப் போராட்டக் களத்தில் வெள்ளைச் சீருடை ஒன்று இரத்தக்கறைகளுடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்து. அதில் சிவப்பு கறுப்பு நிறங்களிலான 'டை' (கழுத்துப்பட்டி) இருந்தது. அந்தக் குறியீடு கிருஷாந்தியை நினைவுபடுத்தும் விதத்தில் அமைந்திருந்தது. செம்மணி வழக்கு கிருஷாந்தி வழக்கு மூலமாகத் துலங்கியது என்றாலும் இரண்டும் வெவ்வேறு வழக்குகள். கிருஷாந்தி வழக்குக்கு பின்னர், அவரைப் போன்றே படையினரால் கடத்திக் கொல்லப்பட்ட இளம் பெண் ரஜினியின் கொலையும் அப்போது பரபரப்பையும் இலங்கை அரசுக்கும் படையினருக்கும் பெரும் அழுத்தத்தையும் கொடுத்த ஒரு வழக்கு.

உரும்பிராயைச் சேர்ந்த இளம் பெண்ணான ரஜினியை கடத்தி வன்புணர்ந்து கொலை செய்து மலசலகூடக் குழிக்குள் புதைத்திருந்தார்கள் படையினர். அது தொடர்பில் முன்னின்று அந்த வழக்கை அப்போதைய யாழ்ப்பாணத்துப் படைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுடன் நேரில் பேசி விசாரிக்க வைத்தவர்களில் முக்கியமானவர் சிவஞானம். அவரின் தொடர் முயற்சி மற்றும் அழுத்தம் காரணமாக காணாமற்போன அந்த இளம் பெண் பற்றிய விசாரணையை தனது இராணுவப் பொலிஸார் மூலம் மேற்கொண்டு அவரைக் கடத்திக் கொலை செய்த படையினரைக் கைது செய்வதற்கும் அவர்களைப் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கும் ஜனக பெரேரா நடவடிக்கை எடுத்தார்.

கிருஷாந்தி வழக்குக்கு ஒப்பாக அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த இந்த வழக்கு குறித்து இன்றைய தலைமுறையும், கூக்குரலிட்ட அரசியல் காவாலிகளும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களுக்கு அரசியல் வரலாறும் தெரிந்திருக்க நியாயமில்லை. அவ்வாறு பாடுபட்டவர்களை தமக்கு அரசியல் வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதற்காக பகிரங்கமாக அவமானப்படுத்துவதில் சுயஇன்பம் காணும் இத்தகையவர்களை அரசியல் தளத்திலிருந்தே விரட்டியடிக்கவேண்டும். பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து இதற்கெதிராகக் குரல் கொடுப்பதன் மூலமே அதனைச் சாத்தியமாக்க முடியும்.

'அணையா விளக்கு' போராட்டத்தில் குழப்பத்தை ஏற்டுத்தி தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கு இழிசொல் ஏற்படுத்தியவர்கள் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் ஏற்றுக்கொண்டார். மயிலிட்டியில் காணி உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்தில் கலந்துகொண்ட சமயத்தில் இந்த விடயத்தை அவர் சிவஞானத்திடம் நேரிலேயே தெரிவித்தும் உள்ளார். இந்த இழிசெயலைச் செய்த நபர் யார் என்பதையும் அவர் வேண்டுமென்றேதான் இப்படிச் செய்கிறார் என்பதையும் ஏற்றுக்கொண்ட சிறீதரன் அதற்காக சிவஞானத்திடம் வருத்தமும் தெரிவித்தார் என்று அறிய முடிந்தது. இங்கு வருத்தம் தெரிவிப்பது முக்கியமல்ல, கிளிநொச்சியில் தமிழ் அரசுத் தரப்பினர் அந்த நபருடன் இன்னமும் தொடர்புகளையும் ஊடாட்டங்களையும் வைத்திருக்கின்றனர் என்று தெரிகிறது. அண்மையில் வடக்கு ஆளுநரைச் சந்திக்கச் சென்ற கிளிநொச்சி உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகள் ஒருவருடன் அவரும் சென்றிருந்தார் என்றும் கேள்வி. அத்தகைய ஊடாட்டங்களை நிறுத்தி அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்தி அவர்களை அரசியலைவிட்டே ஓடவைப்பதுதான் சிறீதரன் போன்ற மூத்த அரசியல் தலைவர்களின் தலையாய பணி..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஐ.நா. பாதுகாப்புச்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரான புளொட் தலைவர் சித்தார்த்தனும் கலந்துகொண்டார். 7 மணி முதல் 8.45 வரையும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அதன் பின்னர் சந்திப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்ததாவது:

உலகில் பல்வேறு முக்கிய அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் இலங்கை மனித உரிமைகள் விடயத்திலிருந்து சர்வதேசத்தின் கவனம் திசை திரும்பிவிடக்கூடாது என்பது தனது இலங்கைப் பயணத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று என்று மனித உரிமைகள் ஆணையர் தெரிவித்தார்.

2025 செப்டெம்பரில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டியதாக உள்ளது. இந்த நிலையில், ஈரான் - இஸ்ரேல் போர், ரஷ்யா - உக்ரைன் போர், பலஸ்தீனம் - இஸ்ரேல் போர், இந்தியா - பாகிஸ்தான் போர் என்று உலகம் பதற்றமான நிலையில் இருக்கும்போது இலங்கை தொடர்பான விவகாரத்தில் உலக நாடுகளின் கவனத்தைத் தொடர்ந்து தக்கவைத்திருக்க முடியுமா என்று நான் அவரிடத்தில் கேட்டிருந்தேன். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

போர் முடிந்து 16 வருடங்கள் கடந்தும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதனால மக்கள் பெரும் கோபத்தில் இருக்கின்றார்கள். இதற்கு அரசியல்வாதிகளும் பொறுப்பு என்பதே மக்களின் குற்றச்சாட்டு. அதனால்தான் அவர்கள் அரசியல்வாதிகள் மீதும் தமது கோபங்களை வெளிப்படுத்துகிறார்கள். அதனால், இலங்கை விவகாரத்தை மனித உரிமைகள் பேரவையில் மட்டும் வைத்திருக்காமல் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை, பொதுச் சபை போன்ற ஏனைய சபைகளுக்கும் கொண்டு செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

ஐ.நா.வின் ஏனைய சபைகளுக்கு மனித உரிமைகள் பேரவை தனது அறிக்கைகளைச் சமர்ப்பித்தால் அவையும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தேன்.

மக்களின் காணி விவகாரம் தொடர்பாகவும் அவரது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தோம். வலி. வடக்கில் காணிகளை விடுவிக்கும்படி கேட்டு மயிலிட்டியில் நடக்கும் போராட்டம், கிழக்கில் மயிலத்தமடு காணிப் பிரச்சினை என்பன உட்பட தமிழர்களின் காணிப் பிரச்சினை தொடர்பாக அவருக்கு எடுத்துவிளக்கினோம். தான் இங்கு வந்ததில் இருந்து இந்தக் காணிப் பிரச்சினை தொடர்பில் அதிகம் கேள்விப்படுகின்றேன் என்று அவரும் தெரிவித்தார்.

நிலைமாறுகால நீதி தொடர்பிலும் அவரது கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம். போரில் நடந்த உண்மைகளைக் கண்டறிவதில் இலங்கை ஆளும்தரப்புக்கள் அக்கறையே காட்டவில்லை என்பதை அவரிடம் சுட்டிக்காட்டினேன். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு நடந்த அவலங்களை மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்லும் நிலைதான் இங்கு இருக்கின்றதே தவிர, உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை எதுவும் இல்லை. நீதிமன்றப் பொறிமுறை பற்றி எந்தப் பேச்சும் இல்லை. மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் உயராணையரின் கடந்தவருட அறிக்கையில்கூட, மாகாணசபைத் தேர்தலை நடத்தும்படி கூறப்பட்டிருந்தது. அது பற்றியும் பேசினோம். ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நான் ஒரு தனிநபர் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கின்றேன். அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு இரு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. அதனை சவாலுக்குட்படுத்தி யாரும் உயர் நீதிமன்றம் செல்லவில்லை. எனவே ஆளும் தரப்பு நினைத்தால் ஒரு மாதத்திற்குள்ளேயே அந்தப் பிரேரணையைச் சட்டமாக்கி மாகாண சபைத் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் வகையில் செய்யமுடியும். இலங்கை அரசுத்தலைவரிடம் இந்த விடயம் தொடர்பில் அழுத்தம் கொடுக்கும்படியும் ஐ.நா. உயராணையரிடம் வலியுறுத்தியிருந்தேன்.

தென்னாபிரிக்காவின் திட்டங்களை இங்கு ஏற்றுக்கொள்வார்களா என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகள் அந்த நாட்டின் அரசமைப்பில் மாற்றங்களைச் செய்ததன் பின்னர்தான் அங்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கொண்டுவரப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினேன். அவர் மற்றொரு உதாரணமாக கிழக்குத் திமோர் அமைதி முயற்சியை முன்வைத்தார். போர் முடிந்து 16 வருடங்களின் பின்னர் புதிய விடயம் போன்று எமது மக்களுக்கு இதனைச் சொல்லப் போனால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கில்லை என்று குறிப்பிட்டேன்.

எமது மக்கள் சார்பில் சில விடயங்களை விட்டுக்கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பது குறித்து அவர் கேள்வி எழுப்பினார். அது குறித்து மக்களிடம்தான் கேட்கவேண்டும் என்று பதிலளித்தேன். ஆனால், பாதிக்கப்பட்ட சமூகத்தைப் பொறுத்தவரையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதுதான் அவர்களது முதன்மை இலக்கு என்பதை அவரிடம் வலியுறுத்தினேன் - என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தவிர, தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் - -சிறீ பவானந்தராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஆளும்தரப்புடன் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினார். இதன்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் காணி அபகரிப்புகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள், போன்ற பல விடயங்கள் பேசப்பட்டிருந்தன.

போர் நிறைவுற்றதற்கு பின்னரான சூழ்நிலையிலும் இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் நிழல் போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள் என்பது அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக வட கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்படுகின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று வரைக்கும் இலங்கை அரசின் புலனாய்வுத் துறையினரால் கண்காணிக்கப்பட்டும் விசாரிக்கப்பட்டும் வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் தமிழ் பேசும் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் வகையில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றது. இதுவும் ஓர் இன அழிப்பு எனவும் குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட மக்கள் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை அவர்களிடத்தில் கையளித்து அவர்களின் குடியிருப்பு மற்றும் தொழில் நடவடிக்கைகளுக்கு உதவுமாறும் வலியுறுத்தி இருந்தார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தாங்கள் இன்றுவரை 30 ஆண்டு காலமாக தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? தங்களால் கையளிக்கப்பட்ட உறவுகள் இன்னும் தங்களிடம் மீளவழங்கப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் உண்மையை கண்டறிதல் மற்றும் பொறுப்புக்கூறல் விடையங்களுக்கு ஆளும்தரப்புடன் ஈடுபட்டு வருகின்றோம் எனினும் இலங்கை ஆளும்தரப்பு இது தொடர்பில் வெளிப்படுத்தாதபடியால் இலங்கை அரசை தாங்கள் நம்பதயார் இல்லை. இதனால் சர்வதேச அமைப்புகளையே தாங்கள் நம்பி இருப்பதாகவும் உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லை எனவே சர்வதேச நீதிப் பொறிமுறைதான் தங்களுக்குத் தேவை என்பதையும் தெரிவித்தனர்.

இலங்கையின் 30/1 தீர்மானத்தின்கீழ் வந்த 25 தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், 46/1 ஐ.நா தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை பொறுப்புக்கூறல் திட்ட குழுவினர் இலங்கைக்கு வருவதற்கான வீசாவை அரசு வழங்க வேண்டும் இதன்மூலம் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் சந்தித்து உண்மையான சம்பவங்களை பெற்றுக் கொண்டுசெல்ல வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக அதற்கான நீதியை வழங்க வேண்டும் எனவும் இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றுள்ளமை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் இலங்கை ஆளும்தரப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் பொறுப்புக்கூறல் திட்டமானது 1948இல் இருந்து இலங்கை தமிழருக்கு இலங்கை ஆளும்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பில் அன்று தொடக்கம் இன்று வரை ஆவணமாக்கப்பட்டு அறிக்கை இடப்படவேண்டும். வட கிழக்கில் 40க்கு மேற்பட்ட மனித புதைகுழிகள்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## ஆளும்தரப்புடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன. இந்நிலையில் 21 புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்த உடலங்களை ஆய்வு செய்வதற்கு சர்வதேச நிபுனர்களை இங்கே அழைத்து அவர்கள் கண்காணிப்பில் இந்த அகழ்வுகள்மேற்கொள்ளப்படவேண்டும்என்ற பல விடையங்களை கலந்து கொண்டவர்கள் ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்ததோடுமட்டுமல்லாதுஅதுதொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தார்கள்.

இதன்போது பதிலளித்த ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், இந்த விடையங்கள் இலங்கையில் இருப்பதாக தான் உணர்வதாகவும், இதற்கான தீர்வினை இந்த தேசத்துடன் இணைந்துதான் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும், இருந்தாலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களே ஆகியுள்ள நிலையில் தொடர்ச்சியாக இந்த அரசாங்கத்தை இலங்கையில் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்துவதோடு, நீதிப்பொறிமுறை சார்ந்த விடையங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கின்றது எனவும். அதேபோல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் ஜனாதிபதியை தான் சந்திப்பதாகவும், இச்சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார்.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுசேர்க்கும்வகையிலேயேசம்பவஇடத்துக்கு சென்றிருந்தேன். செம்மணி புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாரென்பது மக்களுக்கு தெரியும். இந்தக் கொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் மக்கள் எம்மிடமும் கூறியுள்ளனர். எனவே, எங்களுக்கும், அதற்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.

செம்மணியில் குழப்பம் விளைவித்த இளைஞர்கள் சிலர், செம்மணி புதைகுழி சம்பவங்கள் நடந்த காலகட்டத்தில் பிறந்திருந்தார்களா என்பதுகூடத் தெரியாது. இப்படியானவர்களே அரசியல்வாதிகளை விரட்டியடிக்கும் செயலில் ஈடுபட்டனர்.

'அணையா விளக்கு' போராட்டத்தை ஆரம்பிக்கின்றோம், அதில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என அழைப்பு விடுத்தனர். ஆளுங்கட்சியினரும் பங்கேற்க வேண்டும் என சமூகவலைத் தளங்கள் ஊடாக மக்கள் கருத்துகளை முன்வைத்து வந்தனர்.

ஓர் அமைச்சராக நான் போராட்டத்தில் பங்கேற்பது அப்போராட்டத்தக்கு வலுசேர்க்கும் என்பதே உண்மை. அந்தச் செய்தி சர்வதேசம் வரை செல்லும். அந்த வகையில் மக்களைச் சந்திப்பதற்காகவே நான் செம்மணிக்கு வந்தபோது ஒரு சில கும்பல், தமது அரசியல் இலாபத்துக்கு குழப்பம் விளைவித்தனர். இது தொடர்பில் மக்கள் மத்தியிலும் கேள்வி எழுந்துள்ளது. மக்களின் மனநிலை என்னவென்பதும், அவர்களின் வலி வேதனையும் எங்களுக்கு தெரியும்.

செம்மணியில்குழப்பம்விளைவிக்கப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். செம்மணியில் மட்டும் அல்ல நாட்டில் மேலும் பல இடங்களிலும் புதை குழிகள் உள்ளன. எமது கட்சி தலைவர் உட்பட தோழர்களும் கொன்று புதைக்கப்பட்டனர். இப்படியான சம்பவங்களுக்கு நீதி வேண்டும். அதற்கான தேடலை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும்.

இனவாதம், மதவாத மற்றும் பிரதேச வாதத்துக்கும், பிரித்தாளும் சூழ்ச்சிக்கும் எமது ஆட்சியில் முடிவு கட்டப்பட்டுள்ளது. ஒரு சிறு கும்பல் எம்மை, விரட்ட முற்பட்டாலும் நாம் குரோத மனப்பான்மையுடன் செயற்படப்போவதில்லை. ஓர் அமைச்சராக நான் பாதுகாப்பு தரப்புடன் சென்றிருக்கலாம். சம்பவத்தின் பின்னர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. தனிமனிதனாகவே நான் வந்தேன். ஏனெனில் மக்கள் எம்முடன் இருக்கின்றனர்.

செம்மணியில் முன்னெடுக்கப்படும் 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு நாம் முழு ஆதரவையும் தெரிவிக்கின்றோம் - என்றார்.

## அணையா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்தனர். இந்தப் போராட்டம் ஒரு தன்னியல்பான மக்கள் போராட்டம், அதனால் இங்கு வந்து அரசியல் காழ்ப்புணர்வுகளைக் காட்டிப் போராட்டத்தைக் குழப்ப வேண்டாம் என்று ஏற்பாட்டாளர்கள் 'மைக்'கில் எவ்வளவோ கத்தியும், கெஞ்சிக் கேட்டும் அதைச் செவிமடுக்காத இந்த அரசியல் 'ரௌடிகள்', தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் போராட்ட இடத்திலிருந்து வெளியேறிச் சென்றபோது அவர் பின்னாலேயே ஓடிச்சென்று கூச்சலிட்டனர். அதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஆகியோர் அஞ்சலி செலுத்திய பின்னர் அவர்களை அங்கு நிற்கவேண்டாம் என்று கூச்சலிட்டும் 'ரௌடி'த்தனத்தில் ஈடுபட்டனர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வந்தபோதும் அவரை அஞ்சலியும் செலுத்த விடாது இந்தக் கும்பல் குழப்பம் விளைவித்து அவரையும் வெளியேற்றியது.

போராட்டக் களத்தின் உள்ளே மக்கள் அமைதியாக அமர்ந்திருந்து போராட்டத்திற்கு ஆதரவைத் தெரிவித்தும் நீதியைக் கோரியும் அறவழியில் நடந்துகொண்டிருக்க, வீதிஓரத்தில் கூடி நின்ற இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் மட்டும் போராட்டத்தில் பங்கேற்காமல் குழப்பம் விளைவிப்பதிலேயே குறியாக இருந்தனர்.

ஒழுக்க மீறல்களில் ஈடுபட்ட காரணங்களுக்காக அரசியல் கட்சிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு, விரட்டப்பட்டவர்களும் அவர்களால் அழைத்துவரப்பட்டவர்களுமே இவ்வாறு போராட்டக்களத்தில் 'ரௌடி'த்தனத்தில் ஈடுபட்டு அதன் நேர்மையைக் குழப்பியவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கட்சி ஒழுக்கத்தை மீறினால் என்பதற்காக தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விரட்டப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரே தலைவர் சிவஞானத்தின் பின்னால் அவரைத் தூசித்தபடி சென்றவர் என்றும் அவரால் அழைத்து வரப்பட்ட ஏனையவர்கள் அவரோடு சேர்ந்து கூச்சலிட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று தமிழ் அரசுக் கட்சி மற்றும் வேறு கட்சிகளில் இருந்து விரட்டப்பட்டு, அரசியல் வங்குரோத்து நிலைக்கு ஆளாகியுள்ள பலரே அமைச்சர் மற்றும் ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை போராட்டக் களத்திலிருந்து அகற்றும் 'ரௌடி'த்தனத்தில் ஈடுபட்டனர் என்பதையும், அவர்களின் பெயர் விவரங்கள் உள்ளிட்ட அடையாளங்களை வெளிப்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த 'ரௌடி'க் கும்பல் அங்கு குழப்பம் விளைவித்து போராட்டத்தின் நேர்மைக்கு பங்கம் விளைவித்துக் கொண்டிருந்தபோது, புளொட், ரெலோ, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் இரண்டாம் மூன்றாம் மட்டத் தலைவர்கள் அங்கு இருந்தார்கள் எனினும் இந்த 'ரௌடி'க் கும்பலைக் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ அவர்கள் எந்தவித -முயற்சியும் செய்யவில்லை என்று தன்னார்வலர்களாக இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

''இவர்களால் ஒழுங்கான மக்கள் போராட்டங்களைச் செய்யவும் முடியவில்லை. நடக்கும் போராட்டங்களில் நேர்மையாகப் பங்கெடுக்கவும் முடியவில்லை. யாரோ பாடுபட்டு மக்களுக்காகச் செயற்பட்டால் அதனையும் குழப்பி தமது அரசியல் காழ்ப்புணர்வையும் வெறியையும் தீர்த்துக்கொள்கிறார்கள். போராட்டக்களத்திற்கு வந்த அமைச்சரையும் ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விரட்டியடித்துவிட்டு செம்மணிப் புதைகுழியைத் தோண்டுவதையும் விசாரிப்பதையும் யாரைக்கொண்டு செய்யப்போகிறார்கள் இந்த அறிவிலிகள்? சமயயோசிதமும் சபை நாகரிகமும் அறியாத இத்தகையவர்களா தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கப்போகிறார்கள்? அப்படியொரு நிலை வந்தால் இந்த இனம் அடியோடு அழிவதைத் தவிர வேறு நாதியில்லை" என்று கடுமையாகச் சாடினார் போராட்டத்திற்கு வந்திருந்த, தனது மகனை 28 வருடங்களாகத் தேடிவரும் ஒரு தந்தை.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொறுப்பற்ற அரசியலின் பேராபத்து

**செம்மணியில் அணையா விளக்கு மக்கள் போராட்டத்தின் போது ஏற்பட்ட குழப்பங்கள் மற்றும் அதன் பின்னணியில் அரசியல் தலைவர்களுக்கு எதிராகக் காட்டப்பட்ட செயற்பாடுகள் மிகவும் கவலைக்கிடமானவை. இறந்தவர்களுக்குநினைவாக ஏற்றப்பட்ட அணையா விளக்குகளைத் தகர்த்தல், அங்கு கூடிய மக்களை அச்சுறுத்தல், பொலிஸாரின் வன்முறையான அணுகுமுறை போன்றவை ஒருசிலர் திட்டமிட்டு உருவாக்கிய செயற்பாடுகள் என்பதை மறுக்க முடியாது.**

**போராட்டம் என்பது ஜனநாயக அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். மக்களின் குரலுக்கு இடமளிப்பதற்கும், அவர்கள் நினைவுகளை நினைவுகூர்வதற்கும் தடை விதிப்பது வன்முறைக்கு சமமான அநீதியாகும். செம்மணியில் நடந்த சம்பவம் தமிழ் அரசியல் கலாசாரத்தின் பின்னடைவை மிகத் தெளிவாக பிரதிபலிக்கின்றது. சமூக இடையீடு இல்லாமல்மக்களின்உணர்வுகளைஅடக்கமுயல்வதும், அந்தப் பயங்கரவாதத் தடையினை வரலாற்றின் ஓர் பகுதியாகவே நிராகரிக்க முயல்வதும் மிகுந்த பொறுப்பற்ற செயற்பாடுகளாகும்.**

**இந்த நிகழ்வைத் தொடர்ந்து ஒரு சிலர் இதனை வலுக்கட்டாயமாகக்கடந்துசென்று, இதுபொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டதொரு எதிர்ப்பு நடவடிக்கை என்ற ரீதியில் பேசிக் கொண்டிருப்பதும் நியாயப்படுத்துவதும் மிகவும் ஆபத்தான ஓர் முன்னுதாரணமாக இருக்கிறது. இன, மொழி, கலாசார அடையாளங்களை மதிப்பதற்கு பதிலாக, மக்கள் மனதில் பீதி வளர்த்தும், தாங்கள் மட்டுமே சட்டமும் அதிகாரமுமாக உள்ளனர் என்று நிரூபிக்க முயலும் கொடூரம் இது.**

**இந்தத் தொடரும் அரசியல் துர்நடத்தை யார் மேற்கொள்கிறார்கள் என்ற கேள்விக்கு பதில் தேடுவது அவசியம். பொதுமக்கள் தங்களின் நியாயமான உரிமைகளை வேண்டிக்கொள்ளும் போதெல்லாம் அதனை அரசியல் கட்சிகள் தம் தேவைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளும் இந்தப் போக்கு வெகுநாள் நிலைத்திருக்கக்கூடாது. மக்களின் உணர்வுகளை மதிக்காத அரசியல் செயற்பாடுகள் காலப்போக்கில் சமூக சீர்கேடுகளையே உருவாக்கும்.**

**அணையாவிளக்குகளைஅணைக்கநினைத்தவர்கள், அந்த எண்ணமே தவறு என்பதை உணர வேண்டிய நேரமிது. அங்கு நிகழ்ந்த நிகழ்வுகளை சீர்குலைக்கும் வகையில்செயற்பட்டதன்பின்னணியில்இருப்பவர்களை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. ஒவ்வொரு நினைவுநாளும் ஒரு புதிய அரசியல் மேடைபோல மாறுவதை நிறுத்த வேண்டியது அனைவரதும் பொறுப்பு, உணர்வுப்பூர்வமாகவும் நீதிசார்ந்த முறையிலும் மக்களின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டிய நேரம் இது.**

**இதற்கு அரசியல் தலைவர்கள் பொறுப்புடன் செயல்படவேண்டும். இத்தகைய செயற்பாடுகளை கட்சி பேதமற்றுக்கண்டிக்கவேண்டும். மக்கள் உணர்வுகளைப் புறக்கணிக்கும் இத்தகைய அரசியல் பொறுப்பற்ற நிலைப்பாடு தொடருமானால், தமிழர்களின் எதிர்கால அரசியலுக்கே பேரழிவைத் தரும் என்பதை உணர்ந்து அவர்கள் செயற்படவேண்டும்.**

# தமிழ் மொழி தெரியாத பிரதி அமைச்சரால் கடற்றொழில் வளக் கூட்டத்தில் நேரவிரயம்

தமிழ் மொழி தெரியாத கடற்றொழில் நீரியல் வள பிரதி அமைச்சரால் யாழ். மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேரவிரயம் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மொத்த சனத்தொகையில் 25 வீதமான மக்கள் கடற்றொழிலை மேற்கொள்பவர்களாகக் காணப்படும் நிலையில், அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இந்திய மீனவர்கள் பிரச்சினை, சட்டவிரோத முறைகளை பயன்படுத்தி மீன் பிடித்தல், தென்னிலங்கை மீனவர்களின் பிரச்சினைகள், மீன் பிடிக்கான இறங்குதுறைகளை சீரமைத்தல், மயிலிட்டி மற்றும் பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் பிரதிநிதிகளின் கருத்துக்கள் பெறப்பட்டுக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகேவுக்குத் தமிழ் தெரியாததால் கூட்டத்தில் நேர விரயம் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் இருக்கத்தக்கதாக, மொழி தெரியாத பிரதியமைச்சரும் கலந்துகொண்டதால் இந்த நேரவிரயம் ஏற்பட்டது என்று வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் பிரகாஸ் விசனம் வெளியிட்டார்.

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தினை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த காலங்களில் கடற்றொழில் அமைச்சால் அமைக்கப்பட்ட ஏலம் கூறும் இடம் மீனவர்கள் தங்குமிடம் என்பன ஆடு மாடுகள் படுக்கின்ற இடங்களாக மாறி உள்ளன. அரசு நிதி பொருத்தமற்ற இடத்தில் வீணாக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கதைப்பதற்கு மாவட்ட கடைத்தொழிலாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நேரத்தினைக் கேட்டபொழுது நாம் தவிசாளர்களாக தெரிவு செய்யப்பட்டதற்கு வாழ்த்துக்களை தெரிவித்து பிரதி அமைச்சர் அமைச்சரும் எம்மைத் திருப்பி அனுப்பி உள்ளார்கள்.

இத்தகைய கூட்டங்கள் இவ்வாறுதான் எதிர்காலத்திலும் நடக்கும் என்றால், தவிசாளர்களான நாங்கள் இவற்றில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பிரதீபன், கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுதாகரன், அமைச்சின் செயலாளர் , பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மன்னாரிலிருந்து மணல் கடத்திய 3 டிப்பர்களை மடக்கினர் பொலிஸார்

புவிச் சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தினால் வழங்கப்படும் ஆற்று மணல் மற்றும் தரை மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தில் மாற்றம் செய்து மிகவும் சூட்சுமமான முறையில் மன்னாரில் இருந்து மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 டிப்பர்களை நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி பிரதேச போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவினரால் இன்று மதியம் யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியின் தனங்கிழப்பு பகுதியில் வைத்து குறித்த 3 டிப்பர்களையும் பிடித்ததுடன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

இந்த டிப்பர்களுக்குத் தரை மணல் ஏற்றுவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் மாற்றம் செய்து ஆற்றுமண் ஏற்றியுள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்யப்பட்டிருப்பதை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்

# கனம்புளியடியில் கள்ள மண் டிப்பரை ஆணித் தடை வீசிப் பிடித்த பொலிஸ்

பளை பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த டிப்பரை மீசாலை- புத்தூர் வீதியின் கனகம்புளியடி சந்தியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவுவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொண்ட வாகன சோதனை நடவடிக்கையின்போது குறித்த டிப்பரை மறிக்க முற்பட்டவேளை பொலிஸாரின் சமிக்ஞையை மீறி அச்சுறுத்தும் வகையில் பயணித்தபோது ஆணித்தடையை போட்டு கைப்பற்றியுள்ளதாவும் சாரதியும் உதவியாளர்கள் இருவரும் தப்பிச்சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDR
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலையும் விசனமும் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர் நேற்று செம்மணியில் 'அணையா விளக்கு' போராட்டத்திலும் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

## நியூஸி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளும் கூட்டாகக் கையொப்பமிட்ட இந்த மனு, நேற்று யாழ்ப்பாணம் வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். ஐ.ஓ.எம். பணிமனையில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சிவில் சமூக அமைப்புக்களைச் சந்தித்தபோதே இந்த மனு அவரிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ்மக்கள்மீதானஇனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை கோரிய அந்த மனுவில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களான சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் சந்திரகுமார், ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தவராசா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், தமிழ்ச் சிவில் சமூக அமையம், வேலன் சுவாமிகள், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோரின்உறவினர்களின் சங்கம், தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதி, கிராமிய உழைப்பாளர் சங்கப் பிரதிநிதி ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

## ஏற்பாட்டாளரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது குழுவில் நிகழ்த்திய போது காலம் ஒரு தகவல் சொன்னது. 'ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்ஸ்தானிகர் வருகிறார்' என்று.

நீதி கிடைக்கின்றதோ இல்லையோ! வருகின்றவரிடம் கேட்க வேண்டிய கடைப்பாடு. எப்படி கேட்பது? குழுவில் தொடர்ச்சியான ஆலோசனைகள்.

இம்முறை குரல் உரத்ததாக, உயர்ந்ததாக இருக்கவேண்டும். மக்கள் மனதில் அந்த குரல் பதிய வேண்டும். அவர்கள் தன்னெழுச்சி பெற்று நீதியை ஒற்றுமையாக சர்வதேசத்திடம் கேட்க வேண்டும்.

ஆலோசனைகளில், ஒவ்வொருவர் கருத்துக்களும் புதிதாகவும் ஆழமான தாகவும் இருந்தது. ஏற்கனவே பல மக்கள் போராட்டங்களில் இருந்த சில மக்கள் அமைப்பினரிடமும், சட்டத்துறை சார்ந்தோர் இன் ஆலோசனைகளும் இருந்தன.

இறுதியில்

-மக்களின் அமைதிவழி போராட்டம்.

- மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாது.

- மூன்று நாள் போராட்டம்.

- மக்கள் நெஞ்சில் பெரும் சுவாலைவிடும்.

' அணையா விளக்கு'

தேதி குறிப்பிட்ட நாள் முதல் ஆதரவு தமிழ் அமைப்புக்கள், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல்வேறு தரப்புக்கு இடமும் பேசினோம். ஊடக நண்பர்கள், யாழ் ஊடக மையம் பெரும் ஆதரவையும் மக்கள் மத்தியில் இதனை எடுத்தும் சென்றனர்.

முதலாவது ஊடக சந்திப்பில் இருந்து தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவு, ஏனைய மக்கள் அமைப்புக்கள் , பொது மக்களின் பேராதரவு கிடைக்கப் பெறத் தொடங்கியது.

முதல் நாளும் தொடங்கி மூன்றாம் நாளாக மாறியது முகநூலில் முகாமிட்டு முழங்கும் அத்தனை பேரில் ஒரு சில முகங்களே அதுவரை.

ஏனைய களச் செயற்பாட்டாளர்கள் பலர் கட்சி பேதமின்றி உதவிக்கு வந்தனர். அனைத்து தமிழ் தேசிய கட்சிகளிலும் இருந்த உண்மை தமிழ் தேசிய விசுவாசிகள் பல நேரடி உதவிகளையும் புரிந்தனர்.

வேற்றுமையில் ஒற்றுமை. ஒற்றுமையின் ஒற்றை புள்ளி ' தமிழ் தேசியம் '.

விமர்சன வட்டங்கள் விமர்சிக்க தொடங்கின. (அவர்களால் முடிந்தது)

மூன்றாம் நாள் காலையில் இருந்தே அனைத்து தரப்பிடமும், அமைதியாக நடாத்தி முடிக்க வேண்டுகோள் வைத்தோம்.

ஏனெனில் ஐ.நா அலுவலக வேண்டு கோள் அப்படி இருந்தது. 'எதிர் போராட்டங்கள் இருந்தால் பாதுகாப்பு காரணங்களுக்காக போராட்ட இடத்திற்கு வருகை தரமாட்டார்கள் என்பதே!

அவரை அங்கு வர வைப்பது என்பது பகீரதப்பிரயாத்தனமாக இருந்தது. வெவ்வேறு அமைப்புக்கள் எமக்காக அவர்களிடம் பேசியது. பல முயற்சிகள் செய்தோம். அவர் வராது விடில் அலுவலகம் வரை அமைதி பேரணியாக செல்வதென்று முடிவெடுத்தோம்.

மூன்றாம் நாள் காலை வரை, அவர்கள் முடிவு தெரியாது. அமைதியாகஎழுச்சிபூர்வமாக'அணையாத விளக்கு' எரிந்து கொண்டிருந்ததைக் பார்த்து எங்கள் இடத்திற்கும் வருகை தருவதாக அறிவித்தல் வந்தது. பாதுகாப்பு காரணங்களால் இரண்டு விடயங்களை தெளிவாக அறிவுறுத்தியிருந்தார்கள். பாதைகளில் தடைகள் இல்லாமலும் அமைதியான முறையில் இருந்தால் மட்டுமே என்று!

மிகப்பெரும்மகிழ்ச்சி. வீதியின் இருமருங்கிலும் இருந்த வாகனங்களை தொண்டர்களின் உதவியுடன் நகர்த்தி கொண்டிருந்தேன். கூக்குரல் கூச்சலுடன் ஒரு குழுவினர் ஒரு கட்சித்தலைவரை துரத்துகின்றனர்.

காணொளிகள் தெளிவாக இருக்கின்றன.

'நீங்கள் செய்வது பிழை, இப்படி செய்யாதீர்கள் என்று' அவர்களை தடுத்தோம்.

உண்மையில்உட்கட்சிபிரச்சினைஒன்றுசார்ந்து அவரை அவமதிக்க திட்டமிட்ட நடவடிக்கையில், ஏற்கனவேஅக்கட்சிதலைவரதுவிமர்சனம்நிறைந்த ஒரு நடவடிக்கையால் கோபம் கொண்டிருந்த உணர்ச்சி பொங்கியிருந்த சிலர் இளைஞர்களும் அவரை துரத்தினார்கள்.

அவர் மீதான அந்த உணர்ச்சி மிக்க சிலரின் கோபம் சரி ஆனால் காட்டிய இடம் பிழை என்பேன். முகநூலில் இருக்கும் பலருக்கு இதனால் என்மீது கோபம் வரலாம். ஆனாலும் அவர்கள் செய்தது பிழை.. போராட்டத்தின் கருவை மாற்றி இந்த பிரச்சினையை மட்டுமே ஸஷ்ளழவி விரும்பிகள் காட்டிக் கொண்டே இருந்தார்கள்.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைத்து விட்டார்கள்...தொடர்ந்து

உயர்ஸ்தானிகர் வருவது பற்றி உறுதிபட கூறமுடியாது எனும் தகவல்...

மீண்டும் அவ்வாறு செய்யாதீர்கள் என எத்தனையோ தடவை கேட்டுக் கொண்டே இருந்தோம்.

உறவுகளே! அமைதி வழி போராட்டங்களின் முடிவுகள் எப்போதும் கலவரங்களாகவே ஆளும் வர்க்கத்தால் முடிக்கப்பட்டதே வரலாறு.

நாங்கள் சட்டத்திற்கும் நின்று போராடினாலே மட்டுமே போராட்டம் வெற்றி பெறும். திட்டமிட்ட முறைகளில் ஏதேனும் வன்முறை உட்புகுந்தால் காவல்துறை உட்புகும். போராட்டம் முடித்து வைக்கப்பட்டிருக்கும்.

மீண்டும் ஒரு குழப்பம். போராட்டம் நிறைவு பெறும் நேரத்தில்.

இனவுணர்வு என்று அதற்கு விளக்கம் தந்தாலும் அது அவ்விடத்தில் நடந்தது பிழை. பறந்தது பாதுகாப்பு அறிக்கை. வந்தது தகவல் எமக்கு...

'உயர்ஸ்தானிகர் வரமாட்டார்' என்று...சோலி முடிஞ்சுது..

இத்தனை நாள் பட்ட கஸ்டம் சிதறுண்டு போனது. பல தரப்புக்களூடாக சார்ந்தோருக்கு வேண்டு கோள்கள் வைத்தோம். காத்திருக்கும் அப்பழுக்கற்ற அந்த பெற்றோருக்கு என்ன பதில் தரப்போகிறோம் என்று தெரியவில்லை. கலங்கியே போயிருந்தோம். இருவராக அலுவலகம் சென்று எப்படியாவதுபேசிவிடவேண்டும்என்றுசென்றோம்.

இல்லை அவர் வருவார் என மீண்டும் தகவல். காணாமல் போனோர் பெற்றோரை முன்னிலைப்படுத்தி சந்திக்க ஆயத்தங்கள் ஐ செய்தோம். 500 து தொலைவில் உள்ள இந்து மயானத்திற்கு கண்ணெதிரே வாகனங்கள் வருகின்றன. நம்பிக்கை கொண்டு காத்திருந்தோம். சில நிமிடங்களிலேயே நம்பிக்கை தகர்ந்தது, அவரது பாதுகாப்பு வாகன வரிசை திரும்பியது. மயானம் பகுதிக்கு மகஜர்களை கொண்டு ஓடிப் போனோம். காவல்துறையினரிடம் அனுமதி கோரிய போது நீதிமன்ற கட்டளை பிரகாரம் ' உதயசூரியன்' என்ற உங்களுக்கு தடை என்று ஆவணத்தை காண்பித்தனர். நான் உதயசீலன் எனவே நான் அவனல்ல. என்னை அனுமதிக்க ஏதேனும் வழி உண்டா என்று கேட்ட போது, அவர்கள் மறுத்தனர். ஆனால் ஊடகவியலாளர் நண்பர்களும் அவரை மட்டும் அனுமதியுங்கள் என்று உரத்து கேட்டு கொண்டே இருந்தனர். மயானத்தின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்ட வழக்கு தொடுத்தார் அழைப்பை மேற்கொண்டு எங்களை சந்திக்க அவரை வலியுறுத்தியதாக கூறினார்..

வாகனத்தில்ஏறியவரிடம்'அணையாவிளக்கிற்கு வாருங்கள் ' என்று திரும்ப திரும்ப கேட்டேன். வாகன கண்ணாடியை இறக்கி கோரிக்கைகளை வாங்கி கொண்டவர். எதிர் திசையில் புறப்பட்ட வாகனங்களை திருப்பி போராட்ட மையத்திற்கு போகச் சொன்னார்.

கால்நடையாக ஓடினோம். அவர் வரும் இடங்களை ஒழுங்கமைத்து விட அவர் வந்தார்.

முடிந்தவரை கிடைத்த நிமிடங்களில் கோரிக்கைகளை, சம்பவங்களை கூறினோம். ஆரம்பத்தில் சற்று தூரத்தில் நின்றே 'அணையா விளக்கை' பார்வையிட இருந்தவர் வேண்டு கோள்களால் மனம் மாறி விளக்கையும் வணங்கி மலரஞ்சலியும் செய்தார்.

கருத்தாழம்நிறைந்தஅவர்வார்த்தைகளையோ அவர் செய்த அஞ்சலியையோ சர்வதேசம் பார்க்கும் வகையில் சரியாக படமாக்க ஊடகவியலாளர்களால் முடியவில்லை. அவர்களுக்கு ஒதுக்கிய இடத்திலும் ஸஷ்ளழவி விரும்பிகள்.....

மொத்த நிகழ்விலும் ஆரம்பம் முதல் நின்ற அவ் ஊடகவியலாளர் நண்பர்கள் அவமரியாதை கூட்டத்தில் நின்ற யாராலும் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள்பங்களிப்பைதெரிந்தவன்எனும்வகையில் வருத்தம் தெரிவிக்கிறேன்.

நீதிகிடைக்கின்றதோ இல்லையோ, அதன் முதல் படியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தோம் என்பதே நிலைப்பாடு. வருவதை வரலாறு சொல்லட்டும்.

நாளைக்கும் நிலவு வரும்.....

23ந்திகதிக்கு முன்னைய நாள் வரை பந்தல் அமைப்பு பற்றி கடுமையாக யோசித்திருந்தோம். கடும் காற்றின் உக்கிரம் அதிகமாகவே இருந்தது. 22 ந்திகதி ஒரு இசை நிகழ்ச்சி வேறு.

மாலைக் கருங்கல்லில் மேகக்கருப்புடன் கடும் புயல் காற்று ஒன்று சில நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. அத்தனை நிகழ்வையும் புரட்டி போட்டது.

மறுநாள் முதல் , அணையா தீபம் வாகனத்தில் ஏற்றப்படும் வரை பெருங்காற்று வீசவில்லை.

பின்பு மீண்டும் பெருங்காற்று வீசத் தொடங்குகிறது. பந்தலின் தகரம் படபடவென அடித்து ஒரு சேதி சொல்கிறது..

'அமைதி நிகழ்வில் அரசியல் பண்ணி அராஜகம் செய்பவர்களே!! அவதானமாயிருங்கள்'

உள்ள கிடக்கைகளை கொட்டியே தீர்த்தேன். உங்கள் அரசியல் அடிவருடி வியாதிகளை இங்கு வந்து காட்டாதீர்கள். வியாதி இருந்தால் கடந்து செல்லுங்கள்...

## நிலைமாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

மிக மோசமான குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற உண்மை பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படாவிடின் அது பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நிலவும் தாக்கங்களை மேலும் தீவிரமடைவதற்கும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு வலுவடைவதற்கும்வழிவகுக்கும்எனஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் (Volker Turk) தெரிவித்தார்.

நீதி நிலைநாட்டப்படாமல் இருத்தலானது சமாதானத்தின் நிலைபேறான தன்மையைப் பாதிக்கும். மாறாக என்ன நேர்ந்தது என்ற உண்மைகளை வெளிப்படுத்துவதன் ஊடாகவே நிலையான சமாதானத்தை நோக்கிய பாதையில் பயணிக்க முடியும் என அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்திருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் செவ்வாய்க்கிழமை (24) மாலை, கொழும்புபண்டாரநாயக்கஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமைகளே சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் காயங்களை ஆற்றுவதற்கும் முன்நோக்கிப் பயணிப்பதற்குமான அடித்தளமாக அமைந்திருப்பதாகவும் நீண்டகால உள்நாட்டு மோதலினால் பாதிக்கப்பட்ட இலங்கை தற்போது நிலவும் சமாதானத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வது அவசியம்.

உள்நாட்டு மோதல், தீவிர பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த இலங்கை, தற்போது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், நல்வாழ்வுக்கான உரிமை உள்ளிட்ட சகல உரிமைகளையும் அழுத்தங்களின்றிப் பேண வேண்டும்.

தற்போது இலங்கை தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கு மற்றும் சமத்துவமின்மை ஆகிய இரண்டு பொறிகளுக்குள்சிக்கியிருக்கின்றது. இதிலிருந்து நாட்டை மீட்பதற்குரிய வழிமுறைகளை இலங்கையர்கள் ஆராய வேண்டும்.

நிலைமாறுகாலநீதியை அடைந்துகொள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் நினைவுகூரல் என்பன இன்றியமையாதனவாகும். அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளை உறுதிசெய்வதற்கும், அவர்களை ஆற்றுப்படுத்தவதற்கும் மிக மோசமான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

மிக மோசமான குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற உண்மை பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படாவிடின் அது பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நிலவும் தாக்கங்கள் மேலும் தீவிரமடைவதற்கும் தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கு வலுவடைவதற்கும் வழிவகுக்கும் என்றார்.

அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், இராஜதந்திரிகள், மதத் தலைவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தரப்பினர் என சுமார் 300 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த இந்நிகழ்வில் 'தீர்வுகளை நோக்கியபாதையாகமனிதஉரிமைகள்'எனும் தலைப்பில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'நாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

மத்திய கிழக்கு மோதல் நிலைமை குறித்து அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட முன்னரே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அது தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றார்.

அமைச்சர்களுடன் இது தொடர்பில் கலந்தாலோசித்து எடுக்கப்பட வேண்டிய முன்னாயத்தங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. வலுசக்தி அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர் உள்ளிட்டோர் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கும், அமைச்சரவைக்கு அதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த விவகாரம் தொடர்பில் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவது குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை.

பெயரிடப்பட்டுள்ள அமைச்சரவை உப குழு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்போது, தேவையேற்படின் அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

அத்தோடு இவ்விகாரம் தொடர்பில் விவாதிப்பதற்கு பாராளுமன்றத்திலும் நேரத்தை ஒதுக்க முடியும். கடந்த அமர்வில் அதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், யோசனையை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வரத் தாமதமானதால் அந்த விவாத்தை நடத்த முடியாது போனது. எவ்வாறிருப்பினும்ஆரம்பகட்டநடவடிக்கைகள் இந்த உப குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த பதற்ற நிலைமை தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் ஏற்கனவே எமது நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றோம்.

இஸ்ரேல் - ஈரானுக்கடையிலான மோதல் ஆரம்பிக்க முன்னரே காசாவில் மோதல் நிலைமை ஏற்பட்ட போதே, நாம் அமைதியைவலியுறுத்திஎமதுநிலைப்பாட்டை அறிவித்திருந்தோம். உலகில் எந்தவொரு நாட்டிலும் யுத்த நிலைமை ஏற்படுவதை அங்கீகரிக்க முடியாது.

காரணம் எதுவாக இருந்தாலும், யுத்தம் ஏற்பட்டால் அதனால் பாதிக்கப்படக் கூடியது சாதாரணபொதுமக்களே. பொதுமக்களுக்கான சேவைகள் பாதிக்கப்படுவதோடு அப்பாவி மக்களே அநியாயமாக கொல்லப்படுவர்.

எனவே நாம் சிறியதொரு நாடாக இருந்தாலும், இந்த யுத்த நிலைமைகளை நிறைவுக்கு கொண்டு வருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

நாம் எந்த நாடுகளுக்கும் சார்பாக செயற்படவில்லை. அமைதிக்காகவே குரல் கொடுப்போம். இந்த மோதல் நிலைமை வலுசக்தி துறை, தேயிலை உள்ளிட்ட ஏற்றுமதித்துறை மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்கள் என பல துறைகளிலும் இலங்கைக்கு நேரடியான பாதிப்பு ஏற்படும். இவை அந்நிய செலாவணி வருமானத்திலும் தாக்கம் செலுத்தக் கூடும்.

இவை மாத்திரமின்றி தற்போது உலகலாவிய ரீதியில் எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது. இவ்வனைத்துறைகளையும் உள்ளடக்கும் வகையிலேயே அமைச்சரவை உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

சில துறைகளுக்கு மாற்றுவழியைத் தேட வேண்டியுள்ளது, ஏனைய துறைகளில் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றார்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2025இல் வெளியிடப்பெற்றது